A

7054

Register Number | | | | | |

**Part III**

# விலங்கியல் / ZOOLOGY

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 150

## பகுதி - I

குறிப்பு : i) எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு மதிப்பெண்.

iii) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக. 30 × 1 = 30

1. உடல் நலமுடைய ஒருவரின் இயல்பான இரத்த அழுத்தம்

அ) 130/90 mm Hg. ஆ) 100/70 mm Hg.

இ) 120/80 mm Hg. ஈ) 160/95 mm Hg.

2. இரண்டாவது இதய ஒலி (டப்) ........................ மூடுவதால் ஏற்படுகிறது

அ) அரைச் சந்திரன் வால்வு ஆ) ஈரிதழ் வால்வு

இ) ஏட்ரியோ வென்ட்ரிகுலார் வால்வு ஈ) மூவிதழ் வால்வு.

3. துரித கண் அசைவுகளுடன் கூடிய உறக்கம் நீடிக்கும் காலம்

அ) 10 – 40 நிமி. ஆ) 02 – 20 நிமி.

இ) 15 – 35 நிமி. ஈ) 05 – 30 நிமி.

4. அதிக அளவு புறஊதாக் கதிர்களின் தாக்கத்தினால் உண்டாவது

அ) கண்கள் சிவப்பாகுதல் ஆ) தோல் புற்றுநோய்

இ) நிறமாற்றம் ஈ) வாந்தி.

5. குளோமருலார் வடிகட்டுதலின் போது மால்பீஜியன் உறுப்பின் செயல்பாடு யாது ?

அ) கார-அமிலச் சமநிலையாக்கி ஆ) உயிர் வடிகட்டி

இ) அடிப்படை அலகு ஈ) உயிர்வேதிச் சமநிலையாக்கி.

[ Turn over

6. மனிதனில் எத்தனை மரபுக் குறைபாட்டு நோய்கள் கண்டறியப்பட்டுள்ளன ?

அ) ஏறக்குறைய 400 ஆ) 300 க்கும் அதிகமான

இ) ஏறக்குறைய 100 ஈ) 300 க்கும் குறைவான.

7. மிகக் குறுகலான அக்ரோசென்ட்ரிக் குரோமோசோம்கள் எத்தொகுதியில் அடங்கும் ?

அ) தொகுதி - ஜி ஆ) தொகுதி - பி

இ) தொகுதி - எஃப் ஈ) தொகுதி - டி.

8. உயிரி தகவலியலில் உதவாத மொழி எது ?

அ) E-காமர்ஸ் ஆ) ஜாவா

இ) C ++ ஈ) யூனிக்ஸ்.

9. மன்னார் வளைகுடா உயிரிய மிகுவளத்தில் காணப்படும் சிறு தீவுகள் எத்தனை ?

அ) 23 ஆ) 20

இ) 21 ஈ) 22.

10. தலைப்பகுதி சற்று நீளமாகவும், நடுவில் குழிவுடன் கூடிய புடைத்த நெற்றியும் கொண்ட மாட்டினம் எது ?

அ) ஹரியானா ஆ) ஹல்லிக்கார்

இ) காங்கேயம் ஈ) காங்ரெஜ்.

11. ஜீன் குழுமங்களின் மேம்பாட்டிற்குத் தேவையானவை

அ) உடற்பண்பு மாற்றங்கள் ஆ) சைட்டோபிளாசம் அதிகரிப்பு

இ) மரபணு மாற்றங்கள் ஈ) குரோமோசோம்களின் குறைவு.

12. கதிர் அரிவாள் வடிவசெல் இரத்தசோகை எந்த இன மக்களில் அதிகம் காணப்படுகிறது ?

அ) அமெரிக்க நீக்ரோ ஆ) ஆப்பிரிக்க நீக்ரோ

இ) ஐரோப்பிய வெள்ளை ஈ) அமெரிக்க வெள்ளை.

13. குளிர்நீரில் பின்பற்றப்படும் மீன்வளர்ப்பு முறை எது ?

அ) ஓடுநீர் வாய்க்கால் உயிரி வளர்ப்பு ஆ) லார்வா உண்ணும் மீன் வளர்ப்பு

இ) அலங்கார மீன் வளர்ப்பு ஈ) விளையாட்டு மீன் வளர்ப்பு.

14. ஒரு செல் ஒட்டுண்ணியால் ஏற்படும் மீன் நோய் எது ?

அ) செப்டிசீமியா ஆ) நீலச்சீழ் நோய்

இ) சாப்ரோலெக்னியாசிஸ் ஈ) நீர்க்கோவை நோய்.

15. பின்வருவனவற்றுள் முத்துச் சிப்பி எது ?

அ) ஆஸ்டரியா எடுலிஸ் ஆ) மைட்டிலஸ் எடுலிஸ்

இ) கிரஸோஸ்ட்ரியா மெட்ராசென்சிஸ் ஈ) பிங்டேடா பியூகேட்டா.

16. பெரியவர்களின் உடல்நிறை எண்ணின் அளவு வரையறை யாது ?

அ) 19 – 20 ஆ) 19 – 25

இ) 10 – 15 ஈ) 15 – 20.

17. எது ஒரு புற பெப்டிடேஸ் ?

அ) அமைலேஸ் ஆ) டிரிப்சின்

இ) லைபேஸ் ஈ) கார்பாக்ஸி பெப்டிடேஸ்.

18. டெரடோலாஜிக் குறைபாடு என்பது எவ்வகை மூட்டு நழுவுதலைக் குறிக்கிறது ?

அ) விபத்து ஆ) கன்ஜெனிட்டல்

இ) நோய் ஈ) பக்கவாதம்..

19. தசையின் சுருக்கத்திற்குத் தேவையான கால்சியம் அயனிகளை வெளியிடுவது

அ) சார்கோபிளாஸ்மிக் வலை ஆ) இரத்தம்

இ) சினோவியல் படலம் ஈ) புரோட்டோபிளாசம்.

20. HIV பாதிப்பு உள்ளவர்களை விரைவில் தொற்றிக்கொள்ளும் நோய் எது ?

அ) நிமோனியா ஆ) மார்புச்சளி நோய்

இ) காசநோய் ஈ) பிளியூரசி.

21. கார்ப்பஸ் லூட்டியத்தால் சுரக்கப்படும் முக்கிய ஹார்மோன்

அ) புரோஜெஸ்டிரோன் ஆ) எஸ்ட்டிரோஜென்

இ) ரிலாக்ஸின் ஈ) ஆக்ஸிடோசின்.

22. வைரஸ் நோயைக் கட்டுப்படுத்தும் அதிக செயல்திறன் கொண்ட வேதிப்பொருள்

அ) ஆம்பிசிலின் ஆ) ஆந்த்ராமைசின்

இ) இன்டர்பெரான் ஈ) டெட்ராசைக்ளின்.

23. நோய்க்கிருமிகள் தாக்குகின்ற உடல்பகுதிகளில் எவ்வகை வெள்ளையணுக் குழுமுகின்றன ?

அ) லிம்ஃபோசைட்டுகள்
ஆ) தைமோசைட்டுகள்
இ) மோனோசைட்டுகள்
ஈ) லியூகோசைட்டுகள்.

24. ஒவ்வாமையில் ஈடுபடும் ஆன்டிபாடிகள் எவை ?

அ) Ig E
ஆ) Ig M
இ) Ig G
ஈ) Ig A.

25. இன்சுலின் ஊசி தேவைப்படுகிற சர்க்கரை வியாதி எதற்கு எடுத்துக்காட்டு ?

அ) ஒவ்வாமை
ஆ) தடைகாப்புக் குறைவு நோய்கள்
இ) அனாஃபைலாக்சிஸ்
ஈ) சுய தடைகாப்பு நோய்கள்.

26. சுண்ணாம்பு நீருடன் வெல்லம் கலந்து கொடுப்பது எந்த நோய்க்கான முதலுத சிகிச்சை ?

அ) ஆந்திராக்ஸ்
ஆ) வயிற்றுப்போக்கு
இ) மலச்சிக்கல்
ஈ) பால் காய்ச்சல்.

27. மத்திய தரைக்கடல் இனம் எது ?

அ) ஆஸ்ட்ராலார்ப்
ஆ) சுசெக்ஸ்
இ) கார்னிஷ்
ஈ) மினார்க்கா.

28. தம் வாயில் முட்டைகளை வைத்துப் பாதுகாப்பது எது ?

அ) திலேப்பியா
ஆ) ரோ
இ) பாம்ஃப்ரட்
ஈ) தட்டைமீன்.

29. தாயின் வயிற்றிலிருக்கும் கருவின் இதய ஒலியைக் கேட்க உதவுவது எது ?

அ) எண்டோஸ்கோப்
ஆ) பிராங்கோஸ்கோப்
இ) சிஸ்டோஸ்கோப்
ஈ) மின்னணு ஸ்டெதெஸ்கோப்.

30. இந்தியாவில் பழக்கத்தில் இல்லாத தேன்கூடு எது ?

அ) நியூட்டன்
ஆ) லாங்ஸ்டிராத்
இ) நியூபார்
ஈ) ஜியோல்கோட்டி.

## பகுதி - II

குறிப்பு : i) ஏதேனும் பதினைந்து வினாக்கட்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று மதிப்பெண்கள். $15 \times 3 = 45$

31. அவசியமான அமினோ அமிலங்கள் என்றால் என்ன ? அவற்றைப் பட்டியலிடு.

32. மரண விறைப்பு என்றால் என்ன ?

33. இதய - நுரையீரல் செயல் தூண்டலின் முக்கியத்துவத்தைக் கூறு.

34. இரு பக்க உணர் இயக்கம் என்றால் என்ன ?

35. மிக்ஸிடிமாவின் அறிகுறிகள் யாவை ?

36. செவிக் குருத்தெலும்புகள் பற்றி நீ அறிவது யாது ?

37. கார்பஸ் லூட்டியம் மற்றும் கார்பஸ் அல்பிகன்ஸ் என்றால் என்ன ?

38. ஆஸ்காரிஸின் நோயூட்டுத்தன்மை பற்றிக் குறிப்பிடு.

39. ஹேப்டன்கள் என்றால் என்ன ?

40. வரையறு : உயிரி தகவலியல்.

41. கடுமையான கூட்டு நோய் எதிர்ப்புக்குறைவு சின்ட்ரோமின் தனித்தன்மைகள் யாவை ?

42. சூரிய ஆற்றலின் சுற்றுச்சூழல் தாக்கம் பற்றிக் கூறு.

43. பசு அம்மை நோயைத் தடுக்கும் வழிமுறைகள் யாவை ?

44. கோழி முட்டைகளைத் தேர்ந்தெடுக்கும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய குறிப்புகள் எவை ?

45. ஸ்டெதஸ்கோப்பின் பயன்கள் யாவை ?

46. ராயல் ஜெல்லி என்பது யாது ?

47. செர்சின் என்றால் என்ன ?

48. குரோமோசோம் பிறழ்ச்சி என்றால் என்ன ?

49. கோழி-மீன் வளர்ப்பு பற்றி நீ அறிவது யாது ?

50. பின்வரும் வார்த்தைகளின் விரிவாக்கம் தருக :

அ) CIBA

ஆ) CIFA

இ) CMFRI.

## பகுதி - III

குறிப்பு : i) ஏதேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 56 - வது வினா கட்டாயமாக விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் ஐந்து மதிப்பெண்கள். 7 × 5

51. சுவாசக் கட்டுப்பாடு பற்றிக் கூறு.

52. சார்க்கோமியரின் அமைப்பை விளக்கு.

53. தொற்றுநோய் உற்பத்தித் தன்மைக்கு நுண்ணுயிரிகளின் தகவமைப்புகளைக் குறிப்பி

54. காலரா மற்றும் பிளேக் பற்றிக் குறிப்பு எழுது.

55. நோய்த் தடுப்பாற்றல் குறைநோய்களைப் பற்றி விளக்கு.

56. உலகளாவிய வெப்ப உயர்வினால் ஏற்படும் விளைவுகள் யாவை ?

57. மனித சமுதாயத்தில் காணப்படும் வறுமையை எவ்விதம் சரிசெய்யலாம் ?

58. செயற்கை முறைக் கருத்தரித்தல் பற்றி நீ அறிவது யாது ?

59. ஆட்டோ அனலைசரின் மேன்மைகள் மற்றும் குறைபாடுகள் யாவை ?

60. வேறுபட்ட இனங்களுக்கிடையே கலப்பு எவ்விதம் தடுக்கப்படுகிறது எனக் கூறு.

61. மாக்ரோபிராக்கியம் ரோசன்பெர்ஜீயின் உயிரியல் மற்றும் முக்கியப் பண்புகளைக் குறிப்பி

62. குறிப்பு எழுது : உவர் நீர் உயிரி வளர்ப்பு.

## பகுதி - IV

குறிப்பு : i) ஏதேனும் நான்கு கேள்விகளுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு கேள்விக்கும் பத்து மதிப்பெண்கள். $4 \times 10 = 40$

63. சிறுகுடலில் நடைபெறும் செரித்தல் நிகழ்வுகளை விவரி.

64. கணையம் சுரக்கும் ஹார்மோன்களின் உடற்செயலியல் செயல்கள் பற்றிக் கட்டுரை எழுது.

65. மாதவிடாய் சுழற்சியை விவரி.

66. வைரஸ் நோய்கள் பற்றிக் குறிப்பு தருக.

67. மனித ஜீனோம் திட்டம் பற்றி விரிவான விளக்கம் தருக.

68. நன்னீர் மேலாண்மை பற்றி நீ அறிவது யாது ?

69. எலக்ட்ரோகார்டியோகிராம் பற்றி விரிவான விளக்கம் தருக.

70. அலங்கார மீன்வளர்ப்புத் தொட்டியை அமைக்கும் போது கவனிக்க வேண்டிய குறிப்புகள் எவை ? ஏதேனும் ஐந்து அலங்கார மீன்களைப் பற்றி எழுது.